**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 66/2017**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 19.01.2026 | | |
| பெயர்: | மாறன்<br>(PW–4 Cross ) | தகப்பனார் பெயர்: | கதிர்வேல் |
| கிராமம்: | திருநகரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 50/2026 |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 19.01.2026</u>

**(ஆரம்பித்த நேரம்– 12.16)**

1. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 4 ஏக்கர் இருக்கும். தாவாவானது எத்தனை அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 3 அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 அயிட்ட சொத்துக்களுக்கும் தனித்தனியாக நான்கெல்லை தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3 அயிட்ட சொத்துக்களில் ஒவ்வொரு அயிட்ட சொத்திற்கான விஸ்தீரணம் எனக்கு தெரியாது.

2. யார் யார் மீது வழக்கிட்டுள்ளார்கள் என்றால் ஜெயராமன் (வாதி) கஜேந்திரன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியிருக்கிறார். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தின் வசம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜெயராமன் சீர்காழியில் 40 வருடங்களாக வசித்து வருகிறார். ஜெயராமனின் தகப்பனார் வெங்கடேசனைப் பற்றி எனக்கு தெரியாது.

3. நான் குடியிருந்து வருவது திருநகரி கிராமம், புதுத்துறை மெயின்ரோடு என்ற முகவரியில். எனக்கு திருநகரி கிராமத்தில் சொந்தமாக நிலம் உள்ளது. அந்த நிலத்தின் சர்வே எண் 29/9. அது எனது பெரியப்பா பெயரில் உள்ளது. பெரியப்பா தற்போது உயிருடன் இல்லை. தாவா சொத்தை வாதிகள் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது இல்லை என்றால் சரியல்ல. எனது ஊரைச் சேர்ந்த ரெங்கநாதன் மனைவி கல்யாணியை பற்றி எனக்கு தெரியாது.

4. அந்த கல்யாணியிடம் தான் 1ம் வாதியின் தகப்பனார் வெங்கடேசன் கடந்த 17.08.1977ல் தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்து வசத்தையும் விட்டுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சரோஜாவை எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியை தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியனை பற்றி கேள்விபட்டிருக்கிறேன், ஆனால் தெரியாது. தாவா சொத்தை கல்யாணி 1ம் பிரதிவாதியின் கணவரிடம் விற்பனை செய்து, வசம் விட்டுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. மேற்படி சுப்ரமணியன் இறப்பிற்கு பின்பு தாவா சொத்து பிரதிவாதிகள் வசத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2ம் வாதி வீட்டுக்குடித்தனம். நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.32)**